
# மொழி உணர்ச்சி

— நா. சிவபாதசுந்தரம் —



அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம்.

1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி உணர்ச்சி

தோல்புரம்,
புலவர், நா. சிவபாதசுந்தரம் அவர்கள்
(மகாஜனக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்)

அகில இலங்கைக்
காந்தீய சேவா சங்கம்
நீர்வேலி: :யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: செப்டம்பர் 11, 1949, பாரதி திருநாள்.

உரிமை ஆசிரியருக்கே.

விலை 25 சதம்.

சைவப் பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஒருபிள்ளை தனது சொந்தமொழிமூலம் எல்லாவற்றையுங் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை நியாயங்காட்டி நிரூபிக்க வேண்டியதில்லை. அதேஉண்மை சர்வசம்மதமாய் எவரும் ஏற்றுக்கொள்ளவேண்டிய சித்தாந்தம். சுயாதீனம் அநுபவிக்கும் எந்தநாட்டு மக்களாவது, அந்நிய மொழியைத் தமது சாதாரண தேவைகளுக்கு உபயோகிப்பதில்லை. அந்நியர் ஆதிக்கம்உள்ள நாடுகளிலேயே தாய்மொழியோ அந்நிய மொழியோ என்றகேள்வி தோன்றுவதற்கு இடமுண்டு. உலகசரித்திரத்தில் அந்நியர் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளே, தம்மைஆளும் மக்களினது மொழியை அரசியல் மொழியாகக் கையாண்டு வந்திருக்கின்றன. அந்நிய அரசுகளும் பல்வேறுசூழ்ச்சிகளால் தத்தம்மொழிகளை தமது அடிமை நாடுகளிற் பரப்பமுயன்று இருக்கின்றன. அடிமைத்தளையில் அகப்பட்டமக்களும், ஓர் அளவில் தம்மைஆளும் அந்நியரது மொழிகளில் மோகங்கொண்டபோதும் தமது சொந்த மொழிகளிலும் ஆர்வங்காட்டி, அவற்றைப்பேணி வந்திருக்கின்றனர். அடிமைநாடுகள் தமது தாய்மொழிகளைக் கற்பதும் பேசுவதும் சட்டவிரோதமான செயலென்று சிலவல்லரசுகள் சட்டம்வகுத்தும் இருக்கின்றன. போலந்துதேசத்திலே ருஷிய ஏகாதிபத்தியம் இது போன்ற ஓர் சட்டத்தை நிறுவியது. கோறியாநாட்டிலே யப்பானிய ஏகாதிபத்தியமும் இதேவிதியை ஆக்கியது. இந்தச்சட்டம் எங்கெங்கு ஆக்கப்பெற்றதோ அந்தந்த நாட்டு மக்களுக்குத் தமதுமொழியில் ஆர்வமும் அபிமானமும் பன்மடங்கு கூடியது; அரசாங்கத்துக்கும் அரசாங்கத்தின் ஒற்றருக்குந் தெரியாது தம்மொழியை அடிமைநாட்டுமக்கள் விருத்திசெய்ய முயன்றிருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். போலந்துநாட்டிலே பிறந்தவரும், ரேடியம் (Radium) என்னும் விலைமதிக்கொணாத பதார்த்தத்தைக் கண்டுபிடித்தவருமாகிய மடேம் கியூறி (Madam Curie) எனனும் பெண்மணியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அவரதுமகள், தமது தாயாருக்கிருந்த தாய்மொழிப்பற்றையும், அதற்கு ரூஷிய ஏகாதிபத்தியம் விளைத்த இடையூறுகளைப்பற்றியும் விரிவாகக் கூறியிருக்கின்றார். ஏகாதிபத்தியங்கள் தமதடிமை நாடுகளின் சொந்தமொழிகளை நசுக்குவதற்கு இங்ஙனம் பகீரதப் பிரயத்தனம் ஏன் எடுக்கிறார்கள்என்று கேட்கவும் வேண்டுமோ? அடிமைகளுக்கு, தேசியஉணர்ச்சிக்கும் தாய்மொழிப் பற்றுக்கும் உள்ள நுண்ணிய சம்பந்தம் புலப்படாதுபோனாலும் ஏகாதிபத்திய வர்க்கத்தாருக்கு இச் சம்பந்தம் நன்கு தெரியும்.

எம் தாய்நாடாகிய இலங்கை, சுயராச்சியம்பெற்றும் மொழிச் சுதந்திரம் இன்னும்பெறவில்லை. பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளைத் தேடுவதாகவுந் தோன்றவில்லை. தேசிய உணர்ச்சிக்கு மொழிப்பற்று இன்றியமையாதது என்ற உண்மையை எமது இராசதந்திரிகள் ஏன் இன்னும் உணராதிருக்கின்றார்களோ! என்றுதெரியவில்லை. எனது நண்பன் திரு. நா. சிவபாதசுந்தரம் அவர்கள் இவ்வுண்மையை ஒரு சிலருக்காவது தமது இச்சிறுநூலின் மூலமாகப் புலப்படுத்திவிட்டால், அதுவே ஒருசிறந்த தேசியத் தொண்டாகும். அவர்கையேற்ற இத்தொண்டு கைகூடவேண்டுமென்று அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கச் சார்பில் ஆசிகூறுகின்றேன்.

மானிப்பாய்,
6–9–49.

ச. பேரின்பநாயகன்,
அ. இ. கா. சே. சங்கத் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"மொழியுணர்ச்சி" என்ற இச்சிறு நூல் **1948**-ஆம் ஆண்டில் **அகில இலங்கைச் சுயபாஷா மாணவர் இயக்கத்தில்** யான் ஆற்றிய சொற்பொழிவே யாகும். இச் சொற்பொழிவைக் கேட்ட பல அன்பர்களின் தூண்டுதலால் இந்நூலை எழுதலானேன்.

ஈழத்தாய் தமிழ் சிங்களம் என்னும் இருகண்களையுந் திறந்தெழுந்து, கல்வியெனுந் தண்ணளியால் தன் மக்களுக்கு உயிருணர்ச்சியை யூட்டி, அரசுகட்டிலில் அமர்ந்து ஆணை செலுத்தவேண்டுமென்பது எனது இளமை தொட்டுள்ள பேரவா.

தமிழ்மொழியும் தமிழ்ப் புலவர்களும் தாழ்வான போக்கிலே தாழ்த்தப்படுதல், இன்றைய நாளைய தமிழ்ச் சமுதாயம் தழுவக்கூடிய செய்கையல்ல. இன்றுதொட்டு ஒவ்வொரு தமிழனும் இதை உன்னி உறுதிகொள்ளவேண்டும். இவ்வுறுதிக்குத் துணையாகவே இச் சிறுநூலை எழுதுகின்றேன்.

இச் சிறுநூலை வெளியிட முன்வந்த **அகில இலங்கைக் காந்நீய சேவா சங்கத்தாருக்கும்**, அச்சுவாகனம் ஏற்றிடும்போது உறுதுணையாய் இருந்த எனது நண்பர் **வித்துவான். பொன். கனகசபை** அவர்கட்கும் எனது நன்றி.

11-9-49,
தொல்புரம்.

*நா. சிவபாதசுந்தரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை

என்னருமைத்

தாயார்: நா. உமையவல்லி

தந்தையார்: சி. நாகலிங்கம்

என்பவர்களின்

மலரடிகளிற் சூட்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் துணை

# மொழி உணர்ச்சி

உலகில் உயர்ந்தது உயிரோ? உடலோ? இரண்டுமில்லை. இவ் விரண்டும் சேர்ந்த இன்னொரு பொருளே இவ்வுலகில் உயர்ந்தது. இப்பொருள் பலதிற வேற்றுமை உடையது. இவ் வேற்றுமை உடலையோ உயிரையோ பற்றியதன்று; அஃது உயிரும் உடலும் ஒன்றுபட்டு வாழ்க்கையுறுங் காலத்தே உண்டாகிறது. அத்திறம் யாது? அறிவு! அறிவு! அறிவு! என்பீர். உயிரும் உடலும் உடன்பாடாய் உலவும் போதே அறிவு விளககம் பெறுகின்றது. அவ் விளக்கம் உயிர்பெறும் உடலுக்கேற்றவாறும், அவ் வுடலுள் அமைந்த கருவிகட்குத் தக்கவாறும் விளங்கி விளங்கிப் படிப்படியாக விரிந்து வளர்கிறது. இதுபற்றியே நம் முன்னோர்கள் உயிர்க் கூட்டத்தை அறுவகையாகப் பிரித்து அமைத்தார்கள்.

அறுவகை அமைப்பில் அரிய மனிதன் எவ்வமைப்பினன்? ஆறும் அமைப்பினனே. ஆறுவது அறிவே ஆயும் மனஉணர்வு எனப்படும். இம் மனஉணர்வு ஏனைய உயிர்களிடத்து விளக்கமின்றிக் கிடந்து, மனிதனிடத்தில் மட்டுமே கூர்ந்து விளங்குகிறது இம்மன உணர்வின் வடிவே மனிதன். இதனாலேயே மனிதப் பிறவி விழுமியதென்றுங் கொள்ளப் படுகிறது. "இன்னும் பாலிக்குமோ இப்பிறவியே" என்பது அப்பரின் அருமை வாசகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதவுடல்உற்ற அனைவரிடத்தும் மன உணர்வு உண்டா? விளங்குகிறதா? அவ்வறிவு விளக்கம் பெற்ற எல்லோரும் அதன்வழி அமராது நின்றொழுகுகின்றனரா? எனின் இல்லை யென்க. சிலரிடம் பகுத்தறிவு பற்றுவதேயில்லை. அவ்வறிவு அண்டியோருளும் பலர் "நிற்க அதற்குத் தக" என்ற தன்மையில்லாதவரேயாவர். இவ்விரு வகையினரும் ஓரினத்தவரேயாவர். இவரல்லாதவரே மனிதராவர்.

இக் காரணம்பற்றி மனிதவுடல்கொண்டோர் இரு திறமாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு திறத்தார் "மக்கள்" எனப்படுவர்; மற்றொரு திறத்தார் "மாக்கள்" எனப்படுவர். முன்னவர் மன உணர்வு என்னும் ஆறறிவு உடையவர்; பின்னவர் அது விளங்கப் பெறாதவர்.

மனஉணர்வு மாண்ட மனிதனின் விளக்கம் என்ன? அவன் செயல் என்ன? எவ்வுயிரும் என் உயிர் என்பான். அன்பும் அருளுமே என் இரு மூச்சுப்பைகள் என்பான். எனக்கென்று உலகில் வைத்து வாழேன் என்பான். என் வாழ்வு பிறருக்கே என்பான். பிற உயிர்களின் இன்பமும் துன்பமும் எனது இன்பமும் துன்பமுமாகும் என்பான். இன்னோரன்ன இயல்புகள் இயைந்த ஒருவனையே மனிதன் என்று கூறலாம்.

மனித விளக்கத்திற்கு அடிப்படையான கருவி எது? அதுமொழி. இயற்கை அன்னை இனிதாக இயக்குகின்ற ஒலியை மனிதன் அதற்குரிய வாயிலாகப்பெற்று மனிதத் தன்மையை - மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வை விளக்கமுறச் செய்கிறான். அவன் முதலில் ஒலிவடிவாகவும் பின் வரிவடிவாகவும் அவ்வொலியை ஆக்கிய பெரும் படைப்பே மொழியாகும். இயற்கையோடு இயைந்து மனிதன் மன்னியபோதே மொழிபடைக்கும் ஆற்றல் பெற்றான். இயற்கையின் தட்ப வெப்பங்களுக்கு ஏற்றவாறு இயைந்து அமைவு பெற்றிருக்கும் இயற்கையன்னையின் இருந்துணையால் பெற்ற மனவுணர்வின் வடிவே மொழி என்பீர்.

நிலந்தோறும் இயற்கைவளம் வேறுபடும். இயற்கையின் வளம் வேறுபட அவ்வவ் இயற்கையில் இயைந்த மனிதனின் மன உணர்வின் விளக்கமும் வேறுபடும். வேறுபடவே அம் மனிதர்களின் மொழி அமைப்பின் நுட்ப திட்பங்களும் பொருளமைதியும் ஓசை அமைதியும் வேறுபடுமென்க. எனவே; மனிதனின் வாழ்வு அவ்வவ் வியற்கையில் அமைந்த மொழிமூலமாகவே அமையவேண்டும் என்பது வெளிப்படை. இதில் முரண் ஏற்படின் மனிதத் தன்மையில்-மன உணர்வில்-பகுத்தறிவில் முரண் உறுதியாக உண்டாகும். மன உணர்வில் முரண் உண்டானவுடனே மனிதநிலை மாறி மாக்கள் நிலையில்—ஐந்தாவது அறிவு உள்ள உயிர்வகையில் அமைந்துவிடும்.

மொழி ஏன்? மன உணர்வின் விளக்கத்திற்கே. உணர்வின் விளக்கத்தை நிறைவாக வெளிப்படுத்தாவிடின், அம்மொழி நிறை மொழியாகாது. நமது உணர்வின் விளக்கத்தை நிறைவாக அள்ளி வெளியிடும் மொழியே நமது மொழி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத மொழிகள் நமது மொழிகளல்ல. இயற்கையை மறவாத வாழ்க்கையே உயிர்வாழ்க்கை. இயற்கையை மறவாதிருத்தற்கு வழியாது? அவ்வழியைக் காட்ட வல்லது எது? அவ்வியற்கை வழிப்பிறந்த நாட்டுமொழியே.

நமது நாடு தமிழ்நாடு; இங்கிலாந்தன்று. இந்நாட்டு மொழி தமிழ்மொழி. இம் மொழியைத் தன் தாயின் பாலின் மூலமாகப் பெற்றுப் பேசுபவர் தமிழர். தாய்மொழியில் அன்பில்லாதவர்கள் தன்னை ஈன்ற தாயிடத்தும், அத்தாய் காட்டிய நாட்டிடத்தும் அன்பிலாதவராவர். எவன் தன் தாய்மொழியில் பேசுவதையும், எழுதுவதையும், நினைப்பதையும் நிறுத்துகின்ருனே, அவனே உண்மைச் சண்டாளனவன்.

மக்களுடலுக்கு உணவு எத்தகையதோ, அத்தகைத்து மக்கள் அறிவிற்குக் கல்வி. மனிதனின் அறியாமையைக் கல்வி அறிவை விளக்கி அவனது உயிர் வளத்தையும் உடல் வளத்தையும் நேர்மையிற் செலுத்தவல்லது கல்வி. பண்டைக் காலக் கல்வி, பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அன்பை ஆண்டு, அக்காலத்தார் உயிர்கட்கு உறுகண் செய்யாச் செந்நெறியையுஞ் செறித்து ஊட்டினர்; ஏட்டின் எழுத்திற்கு ஏற்றங் கொடுக்காது, பொருள்மீதே ஏற்றங் காட்டினர்; அறிவைத் தூய பொருளாக மதித்தனர்; பொருளால் அறிவைப் போற்றலாகாது ஒழுக்கத்தால் அறிவை ஓம்பவேண்டும் என்றனர். இதனுல் மேல் நாட்டார் நம் கல்வியைக்கண்டு களிப்புற்றனர். ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் நம்மைமறந்து மேல்நாட்டுக் கல்வி முறையைக் கண்டு காமுறுகின்றோம். என்ன விந்தை! என்ன ஆச்சரியம்!

மேல்நாட்டிலிருந்து வந்த வெள்ளையர்கள் நம் மொழியைக் கற்றுக்கொண்டு வாணிபம் செய்வதற்குப் பதிலாக, நாம் அவர்கள் மொழியைக் கற்றுக் கொண்டு வாணிபம் செய்கின்றோம். இதன் பயன் என்ன? நமக்கென்ற கலை, மொழி, நடை, உடை எல்லாம் இழந்து காட்டு மனித சமூகத்தினராகக் கணிக்கும் நிலையில் இருக்கின்றோம். ஒட்டு வாரை ஒட்டிவந்த இந்தக் கொள்ளை நோயைக் கொளுத்தி யெரிக்க முடியாதா? அவர்களின் ஆங்கில மொழியைக் கற்று வியாபாரம் செய்ததற்காக, அவர்கள் எங்கள் அருமைத் தாய்மொழிகளை (தமிழ் சிங்களம்) "வெனுக்குலர்" என்று அழைத்தார்கள். "வெனுக்குலர்" என்றால் "அடிமையின் மொழி" என்பது பொருளாகும். பாருங்கள் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த விதத்தை. மனிதனை மனிதன் விற்று வாழ்ந்த வாழ்வை முதலாகக்கொண்ட மனிதரிடத்து மனவுணர்வு உண்டா? இல்லை! இல்லை!, இல்லை!

அன்பர்களே! ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் தமிழாசிரியர்கள், சிங்களவாசிரியர்கள், பண்டிதர் வித்துவான் புலவர் என்ற பட்டங்கள் பெற்ற அருந் தமிழாசிரியர்கள் அடிமை மொழிச் சின்னங்களாக விளங்கினார்கள். இன்று இலங்கை அவ் வாட்சியில் நீங்கி, விடுதலைத் தினத்தைக் கொண்டாடியும் தம்மொழிகளாம் தமிழ்-சிங்கள மொழிகளை அரசியல் மொழிகளாகக் கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி பெறுதும், "வெர்ணக்குலர்" என்ற சொல்லைச் சொல்லியும், அவ்வாசிரியர்களைத் தாழ்வாகக் கருதியும்வருவதை நாம் காணும்போது உள்ளங் கொதிக்கின்றது. என்னருமைத் தமிழர்களே! உலகம் முழுவதும் தம்புலவன் தம்புலவன் என்று சொல்லுகின்ற திருவள்ளுவரின் தெய்வத் தமிழும், தாகூரின் வங்கமொழியும், உலக மகான் என்ற காந்தியடிகளாரின் குசராத்தி மொழியும். அடிமைகளின் மொழிகளா? ஆ! சொல்லால் அடக்க முடியாத இந்த அவமானத்தை யார் அழிப்பவர்? தாய்மொழி மாணவன், தாய்மொழி ஆசிரியன் என்ருல், ஆங்கிலம் கற்ற தமிழ் மாணவனும் ஆசிரியனும் அடிமை நோக்குடனே நோக்குகின்ருர்கள். தன்னை மறந்த தலைவீக்கத்தை என்னென்பது. கட்டுண்டோம், பொறுத்திருந்தோம் காலம்வந்து விட்டது. இன்று கூடிவிட்டோம். சுதந்திர நாதத்தை எழுப்புகின்ரேம். வெற்றியுண்டு, குலசத்தி துணையுண்டு.

இன்றைய இலங்கைத் தமிழர் சுதந்திர இலங்கையில் ஆங்கிலத்தையே விரும்புகின்றனர். முதன்மை அளிக்கவும் முயல்கின்றனர். காரணமென்? தாய்மொழிப் பற்றின்மையும் சிங்களமொழி கற்பதிலுள்ள வெறுப்புமாம். ஆங்கிலத்தின் எண்ணம் அகன்ருலன்றி நாம் தன்மானமுள்ள மக்களாகவோ - தன்னரசுடைய மக்களாகவோ வாழ முடியாது. கானலை நீரென்று சொல்வது எவ்வளவு கண்மூடித்தனமோ அவ்வளவு கண்மூடித்தனமே ஆங்கிலத்தை மனதில் வைப்பதும், அக்கண்ணுடிமூலம் அனைத்தையும் காண்பதுமாம். இவ்வளவு காலமும் நாம் கற்ற ஆங்கிலக் கல்வி நமக்காகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நம் நாட்டுக்காகவோ பயன்படவில்லை. யாவும் இங்கிலாந்தை நோக்கியே பயன்பட்டது. இதை யாரும் மறுப்பார்களா? முடியவே முடியாது. "நமது நாடு ஈழம்; நாம் ஈழநாட்டின் மக்கள்" என்ற உன்னத நினைவோடு கற்க வேண்டுமானால், இலங்கையில் உள்ள தாய்மொழிகள் மூலமாகக் கற்க வேண்டும் - கற்பிக்க வேண்டும். எதிர்கால இலங்கை எழுந்திருக்க வேண்டுமானால் - இலட்சிய மக்களை ஈன்று ஈடிலாதிருக்க வேண்டுமானால் ஆங்கிலத்தைப் போதனைக் கருவியாக்கக் கூடாது. ஆங்கில மோகமும் - வெறியும் கொண்டவர்களுக்கு இவ்வுண்மை எளிதில் தெரியவரா.

சுதந்திர இலங்கையில் சுயமொழிப் பள்ளியின் நிலையென்ன? எழுதப் பேனா மறுக்கிறது. நிறுத்துகின்றேன். ஆங்கிலப் பள்ளியில் தமிழ் நிலையென்ன? கொலை! கொலை!! ஏன்? ஆங்கில மொழியின் கொலையும் நடக்கின்றது. எங்ஙனம்? அரிச்சுவடி வகுப்பில் தமிழ் எழுத்தையும் ஆங்கில எழுத்தையும் அல்லது கருத்துக்களையும் புகுத்திப் பிள்ளைகள் இருமொழிகளையும் கற்க முடியாது துன்பப்படுகின்றார்கள். இதைவிடச் சிறந்த தற்கொலை யுண்டா? சுதந்திரம் என்ற பேச்சில்லாக் காலத்தில் தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் நன்கு வளர்ந்தன.

இன்று சமூகம் செய்யும் பெருங் கொடுமை யாதெனில், கல்வி யென்றால் ஆங்கிலம் என்று கருதியதே. இந்த இழி வெண்ணத்தால் தமிழ்ப் பாடசாலைகள் தரைமட்டமாக்கப்பட்டு, ஆங்கிலப் பாடசாலைகள் மூச்சுவிட இடமிலாது திணறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடப் பெருக்கத்தையும் புத்தகப் பெருக்கத்தையும் கண்டு மயங்கும் மாணவர்களையும் பெற்றோர்களையும் என்னென்பேன். இத்தகைய கருத்துக்களை மகாத்மாகாந்தி, பாரதி, தாகூர் முதலான பேரறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள். அவற்றை இனிக் காண்போம்.

## மகாத்மா காந்தியடிகள்

1. வரவேற்பு ஆங்கிலமொழியிற் பொறிக்கப் பட்டிருக்கக் காண்கின்றேன். நீங்கள் சுதேசிகள் என்று கருதிக்கொண்டு இவ்வறிக்கையை ஆங்கில மொழியில் அச்சழுத்தினால் நான் சுதேசியல்லன். ஆங்கில மொழிக்கு மாறாக ஒன்றும் யான் சொல்வதற்கில்லை. நீங்கள் உங்கள் நாட்டு மொழிகளைக் கொன்று, அவற்றின் சமாதிமீது ஆங்கிலத்தை நிலவச் செய்வீர்களாயின் நீங்கள் நன்னெறியிற் சுதேசியத்தை வளர்ப்பவர்களாகமாட்டீர்கள் என்று சொல்லுவேன். எனக்குத் தமிழ்மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால், அம்மொழியை எனக்குக் கற்பித்தும், அதை மொழி பெயர்த்து உணர்த்தியும் இருப்பீர்களாயின் உங்கள் கடனை ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள்.

2. தாய்மொழியின் வழியே பிள்ளைகட்குக் கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய் மொழியை அவமதிப்பது நாட்டுத் தற்கொலையாகும்.

3. "நம்மை ஆள்வோர் அக்கலையை (மேல்நாட்டுக் கல்வியை) நம் தாய் நாட்டுக்குக் கொண்டு வருகிறாரே, நாம் என்செய்வது" என்று சிலர்சொல்லக் கேட்டிருக்கிறேன். 'ஆள்வோர் தங் கலைஞானத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டுப் பரப்புகிறார்' என்பதை நான் ஒருபோதும் நம்பமாட்டேன். நீங்கள் ஏன் அதை ஏற்க இசைதல் வேண்டும்.

4. ஐம்பதாண்டுகளாகத் தாய்மொழி வாயிலாகக் கல்வியறிவு பெற்றிருப்போமாயின் நம் மூத்தோரும் ஊழியரும் சுற்றத்தாரும் நமது கல்வியறிவிற் கலப்புற்றிருப்பர். ஒரு போஸோ, ஒரு ராயோ கண்டுவரும் புதுமைகள் இராமாயணம் பாரதம் போல ஒவ்வொரு வீட்டுச் செல்வங்களாகியிருக்கும்.

5. தாய்மொழிக் கல்வி மிக முக்கியம். அம்மொழியிலுள்ள எல்லா நூல்களும் அடங்கிய ஒரு கருவூலம் அமைக்க எண்ணியிருக்கின்றேன்.

6. ஆங்கிலம் பயின்றவர்க்குக் கூர்ஜரமொழி (தாய்மொழி) நிறைவிலா மொழிபோலத் தோன்றும். இதற்குக் காரணமென்னே? ஆங்கிலத்திலிருந்து கூர்ஜர மொழியில் (தமிழ்மொழியில்) மொழிபெயர்த்தெழுதும்போது தோன்றும் அருமைப்பாடே. குறை மொழியிலில்லை; மொழிபெயர்ப்புக் கடனேற்கப்புகும் மனிதன் பாலதே.

7. தாயின் அமுதமொழியாற் பெற்ற பயிற்சி, அயல்மொழிவாயிலாகப் பயிற்சி தரும் பள்ளிக்கூடத்தில் அற்றுப்போகிறது. பள்ளிக்கூட வாழ்வையும் வீட்டு வாழ்வையும் பிணித்துள்ள பாசத்தை அறுக்கிறவன் நாட்டின் பகைவன். இத்தகைக் கல்வி முறையில் நாம் வீழ்ந்து கிடப்பதால் தாயை வஞ்சித்தவர் (மாத்ரு துரோகிகள்) ஆகிறோம்.

8. ஆங்கிலத்தில் நம்மனோர் கொண்டுள்ள வேட்கை அவர்கள் நந்தாய் மொழியிற் பெற்ற அறிவைத் துருப்பிடிக்குமாறு செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆங்கிலம் பயில நாம் செலுத்தும் பேரவாவினின்றும் விடுதலை யடைவது நமது சமூகத்துக்குப் பெருந்தொண்டு செய்வதாகும். சிறுபள்ளிகளிலும் பெருங் கழகங்களிலும் ஆங்கிலமொழிவாயிலாகவே கல்வி கற்பிக்கப்படுகிறது. அது நாட்டின் பொதுமொழியாகி வருகிறது. நமது உயரிய கருத்துக்களெல்லாம் அம்மொழியில் வெளியிடப் படுகின்றன. உயர்ந்த குடும்பங்களில் ஆங்கிலம் இனித் தாய்மொழியாகுமென லார்ட். செம்ஸ்பர்ட் நம்புகிறார். ஆங்கிலத்திற் பயிற்சி பெறல் வேண்டும் என்னும் நம்பிக்கை நம்மை அடிமைப் படுத்தி விட்டது. அது நாட்டுக்கு உண்மைத் தொண்டாற்ற நம்மை அருகரல்லாதாராகச் செய்திருக்கிறது. ஆங்கிலப் பயிற்சி நாட்டின் எளிய மக்கள் கூட்டத்தினின்றும் நம்மைப் பிரித்து நிற்கிறது. நாட்டில் ஆங்கிலம் பயின்ற நம்மவர் பெறும் புதுப்புதுக் கருத்துக்கள், எளிய கூட்டத்தார்க்குப் பயன் படாதவாறு சிறைப்பட்டுக் கிடக்கின்றன.

10. அயல் நாட்டுக் கல்விமுறை நம் பிள்ளைகளை நமது நாட்டிலேயே அயலவராக்கிவிட்டது. இக்கல்விமுறை பெருங் கொலைத் துன்பமாயிருக்கிறது. அயல்மொழி வாயிலாகக் கல்வி பெறல் நமது நாட்டுமொழி வளர்ச்சியைத் தடைசெய்து நிற்கிறது. கொடுங்கோல் அதிகாரம் என்மாட்டிருப்பின் ஆண் பெண் மாணக்கர்களை அயல் மொழி வாயிலாகக் கல்வி பெறுவதினின்றும் நிறுத்தி மாறுதல் நிகழ்த்த வேண்டி ஆசிரியன்மாரை விலக்கி விடுவேன். பாடப் புத்தகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தப்படுத்துமளவுங் கூட நான் பொறுத்தி ரேன்.''

11. திலகரும் ராம்மோகனரும் ஆங்கில மொழித்தொற்றுவாய்ப்படாதிருப்பரேல், இன்னும் பெரியவராயிருப்பர்........நான் ஆங்கில மொழியை வெறுக்கவில்லை; அதை ஒழிக்க விரும்புகிறே னில்லை; மூறையைத் தகர்க்கவே விரும்புகிறேன்.

12. பொதுமக்கள்பால் சைதன்யர், சங்கரர், கபீர்நானக் முதலியோர்க்குள்ள தொடர்பு திலகர் முதலியோர்க்கில்லை. அச்சிங்கங்கட்கு முன்னே இவர் எத்தகையினர்? சங்கரர் ஒருவர் செய்த வேலைக்கிணையாக, ஆங்கிலம் பயின்ற முழுவினத் தாருஞ் செய்தல் முடியாது. குருகோவிந்தர் ஆங் கிலம் பயின்றவரா?........ராம்மோகனரும் திலகரும் இக்கல்வி பயிலாது அவர்க்குரிய இயற்கை வழியிற் பயிற்சி பெற்றிருப்பரேல் சைதன்யரைப் போலப் பெருவினைகள் ஆற்றியிருப்பர்.........ஆங்கிலக்கல்வி நமது ஆண்மையை அழித்துவிட்டது; நமது அறிவு ஊற்றைத் தூர்த்து விட்டது.

13. தாய்மொழிகள் நசுக்கப்படுவது காண என்னுற் பொறுக்க முடியவில்லை. தாய் தந்தை யர் தம் குழந்தைகளுக்கும், நாயகன்மார் தம் நாயகிமார்க்கும் கடிதங்கள் தாய்மொழியில் எழு தாது ஆங்கிலத்தில் எழுத எண்ணுவது குறித்து என்மனம் பொறுக்கவில்லை.

14. குழந்தைகட்கு ஆங்கிலத்தில் கருத்துக் களை நினைக்குமாறும், வெளியிடுமாறும் பிள்ளை களைப் பழக்கும் இந்தியப் பெற்றோர் குழந்தைகளை யும் நாட்டையும் வஞ்சிக்கிறார் என்பது எனது உட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கை. அவர்கள் குழந்தைகளை நாட்டு வழக்க ஒழுக்கங்களினின்றும் விலக்கி நாட்டுச்சேவைக்கே அருகரல்லாதவராகச்செய்கிறார்கள். ஆதலால்யான் குழந்தைகளுடன் தாய்மொழியிலேயே பேசுவ தென உறுதி கொண்டுள்ளேன்.

15. ஆங்கிலமொழி தெரியாவிட்டால் கல்வி பூரணமாகாதென்ற தவறான கருத்தைக் கைவிட வேண்டும்.

16. ஆங்கிலக் கல்விமுறை ஒருபைசாக் கல்விமுறையாகும். அதை அழிப்பதற்கே நான் என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கின் றேன்.

17. ஆங்கிலத்திலிருக்கும் இரத்தினங்களை அநுபவிப்பதற்காக இலட்சக் கணக்கானவர்க ளுக்கு ஆங்கிலம் படிக்குஞ் சிரமம் தருவது கருணை யற்ற செயலாகும்.

18. சிலதொழில்களைச் செய்யும் பொழுது ஆங் கிலம் தேவையாயிருப்பது உண்மை. ஆனால், இத்த கையதொழில்களை ஒருசிலரே செய்ய நேருகிறது. மேலும் இவற்றிற் பல, காரணமின்றியும் நமது அடிமைத்தனத்தினாலுமே ஆங்கிலத்தில் நடை பெறுகின்றன. சில ஆங்கிலேய அதிகாரிகளுக்கு நாட்டு மொழிகளைக் கற்பதிலுள்ள சிரமம் இல்லா திருப்பதற்காக மக்கள் மீது ஆங்கிலமொழிச் சுமையை ஏற்றுதல் என்பது பிரிட்டிசாருக்கு நாடு செலுத்தும் ஒருவகைக் கப்பமேயாகும்.

19. ஆங்கில மொழியைப் பேசுவதிலும் பார்க் கப் பிரிட்டிசாரின் படைமுகத்தில் சேர்ந்து வீழ்ந்து இறத்தல் மிகச் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. சத்தியத்தையும் அகிம்சையையும் பலி கொடுத்து விட்டு அதனுல் வரும் சுயராச்சியத்தை நான் எவ்வாறு ஏற்றுக்கொள்ள மாட்டேனே அதே போலத் தாய்மொழியைப் புறக்கணித்து விட்டு வரும் சுயராச்சியத்தையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

## சுப்பிரமணிய பாரதியார்

ஐயரென்றுந் துரை யென்று மற்றெனக்
காங்கி லக்கலை யென்றென் றுணர்த்திய
பொய்ய நக்கிது கூறுவன், கேட்பீரேல்
பொழுதெ லாமுங்கள் பாடத்திற் போக்கிநான்
மெய்ய யர்ந்து விழிகுழி வெய்திட
வீறிழந் தெனதுள்ள நோய் தாகிட
ஐயம் விஞ்சச் சுதந்திர நீங்கியேன்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்.

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்
சிலமுன் செய்நல்வினைப் பயனுலு நந்
தேவி பாரதத் தன்னை யருளினும்
அலைவு றுத்துநும் பேரருள் வீழ்ந்துநான்
அழிந்தி டாதொரு வாறுபி ழைத்ததே.

## நாமக்கல் இராமலிங்கப்பிள்ளை அவர்கள்

அன்னிய வாழ்க்கையின் ஆசையினுல்
அன்னையை மறந்தோம் நேசர்களே
முன்னைய பெருமைகள் முற்றிலுமே
முயன்றல் தமிழகம் பெற்றிடுமே.

அன்னிய மொழியே தினம்பேசி
அன்னையைப் பணிந்திட மனங்கூசி
இன்னும் இருந்தால் தமிழ்மொழியே
இறந்திடும் உனக்கது பெரும்பழியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகவி தாகூர் அவர்கள்

1. வேறு மொழியினுற் கவிதையை வளர்ப்பது காதலியை மணக்க மற்றொருவரை அனுப்புவது போலத்தான்.

2. ஆங்கிலக் கல்விமுறை கலையறிவு பெறுவதிற் சிக்கனம் காட்டுவதா யிருக்கிறது. உண்மைக்குப் புறம்பான மனப்பான்மையை வளரச் செய்வதாக உள்ளது. தேர்வுகளில் முதன்மை பெற்றபின் அடிமைவாழ்வை ஏற்கவே மனம் தூண்டுகின்றது. சில பதவிகளைப் பெற்றபின் அறிவு வளர்ச்சி குன்றி மடிகின்றது.

3. நாம் உட்கொள்ளும் ஆகாரத்தின் சத்தான அம்சங்கள் நமது சரீரத்துடன் கலந்து கொள்ளுவதற்கு மெல்லுகின்ற பற்களும், உணவைச் செரிக்கச் செய்யும் நீர்ச்சுரப்பும் (உமிழ்நீர்) தேவைப் படுவதேபோல் கல்விபயில அவரவர் தாய்மொழியும் அவசியமாகும்.

4. இன்று நான் உங்கள் முன்னிலையில் ஓர் முக்கியமான செய்தியை விடுக்கின்றேன். அது மகிழ்ச்சியும் கௌரவமும் ஊட்டக்கூடியது. உங்கள் தாய் மொழியின் வாயிலாக மாகாண மக்களுடன் நெருங்கி வாழ்வதனுல் வங்காளம் தனது புகழை நிலைநாட்ட வேண்டுமென்பதே அச் செய்தியாகும்.

திரு. எஸ். என். அகர்வால் அவர்கள்

இங்கிலாந்தில் ஒரு ஆங்கிலேயப் பெண் ஒருத்தி, "உங்களுக்கு உங்கள் சொந்தத் தேசிய மொழி கிடையாதா?" என்று கேட்டாள். "ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை; நன்றாயிருக்கிறது" என்று நான் பதில் அளித்தேன். "அப்படியானால், இந்தியர்கள் தங்களுக்குள்ளே ஏன் ஆங்கிலத்தில் பேசிக் கொள்ளுகின்றார்கள்" என்று கேட்டாள். சரியானபதில் சொல்ல முடியாமல் நான் வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிற்று. நமக்குள்ளே நாம் ஆங்கில மொழி பேசிக்கொள்வதை எந்தக் கண்ணியமான ஆங்கிலேயரும் மெச்சவில்லை என்பதை எனது இங்கிலாந்தின் அநுபவம் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாக்கிக் கொண்டது. இந்தியருக்கு ஒரு பொதுச் சுதேசிமொழி இல்லாததை ஆங்கிலேயன் வெறுக்கின்றான். எனவே ஆங்கில மொழியிடம் நமக்குள்ள மோகத்தை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஒழித்தால் அது நமக்கும் நம் தேசத்திற்கும் நன்மை பயக்கும்.

## திரு. எச். என். பிரியில்ஸ்போர்டு அவர்கள்

நம் உள்ளக் கிளர்ச்சிகளுக்குத் திறப்பு (சாவி) ஒரே ஒரு மொழியிடந்தான் உண்டு. மனத்தில் நாம் எளிதாகவும் சற்று ஆழமாகவும் நினைத்துள்ளதை யெல்லாம் நிச்சயமாகவும் தானாகவும் பிரதிபலிக்குஞ் சக்தி ஒரேஒரு மொழியின் வார்த்தைகளுக்குத்தான் உண்டு. அதுவே தாயின் மடியில் நாம் இருக்கும்போது உபயோகித்த மொழி; நமக்கு முதலில் தெரிவித்தமொழி. வேறெந்த மொழியிலும் கல்வி கற்பித்தால் மாணவருக்கு நிறையத் துன்பத்தைக் கொடுத்தவர்களாவோம். சுயேச்சையாகப் போகக் கூடிய அவர்களது மனத்தை மூடமாக்கியவர்களாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. அன்னிப்பெசண்ட் அம்மையார் அவர்கள்

தாய்மொழிமூலம் கல்வி கற்காத குறைபாட்டினல் நாகரீக உலகில் இந்தியா மிகவும் ஞான சூன்யநாடாக இருக்கிறது. மிகவும் படித்த மக்கள் ஒரு பக்கமும் பெருந்தொகையான பாமர மக்கள் வேறுபக்கமும் இருக்கிருர்கள்.

## திரு. பங்கிம சந்திரர் அவர்கள்

குறிப்பு:- வங்கதேசம், வங்கமொழி என்ற இடத்தில் எல்லாம் தமிழ் என்ற சொல்லை வைத்தால் நலமாகும்.

வங்கதேசத்திற்கு வங்க இலக்கியமே முதன்மை. இப்போது படித்தவர்கள் ஆங்கில இலக்கியங்களிலேயே மயங்கிக் கிடக்கிருர்கள். சிலரே வங்க நூல்களைப் படிக்கிருர்கள். கேட்டால் ஆங்கிலம் போலப் படிக்கத்தக்க ஆழ்ந்த நூல்கள் வங்கத்தில் இல்லை என்கிருர்கள். ஆங்கிலம் கற்றவர் சிலரே; கோடானு கோடிபேருக்கு இன்றும் தாய் மொழியே உயிராயிருக்கிறது. அவர்கள் உள்ளத்தைத் தாய்மொழியே தொடமுடியும். நாம் ஆங்கிலத்தில் விடிய விடியப் பேசினுலும் எழுதினுலும் பயனில்லை. தாய்மொழியில் ஒரு வார்த்தை சொன்னல் அது சனங்களின் உள்ளத்தில உடனே உறைக்கும். அதனுலேதான் பொது சனங்களுக்குத் தாய்மொழி இலக்கியங்களை எழுதி வழங்க வேண்டுமென்கிறேன்.

## சுவாமி. விவேகானந்தர் அவர்கள்

அப்பப்பா! பி. ஏ. பட்டத்திற்காக என்ன தடல்புடல்? என்ன ஆர்ப்பாட்டம்? சில நாளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் அவ்வளவும் பறந்து விடுகின்றது. கடைசியில் அவர்கள் கற்றுக் கொள்வதுதான் என்ன? நம்முடைய சமயம், பழக்க வழக்கங்கள் எல்லாம் கெட்டவை என்றும், மேனுட்டாருடையன எல்லாம் நல்லவை யென்றுங் கற்றுக்கொள்கிறார்கள் அவ்வளவு தான். தற்போது நீங்கள் பெற்றுவரும் கல்வியிற் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் அதிலுள்ள ஒரு பெரிய பிரதிகூலத்தினால், அந்த நல்ல அம்சங்களெல்லாம் அமிழ்த்தப்பட்டு விடுகின்றன. முக்கியமாக அது மனிதத்தன்மை அளிக்குங் கல்வியன்று; முழுதும் எதிர்மறைக்கல்வி. "இதுகெட்டது; அது கெட்டது" என்றே எப்பொழுதுங் கூறும் எதிர்மறையானபயிற்சி, மரணத்தை விடக் கொடியதாகும். இப்பொழுது நம் நாட்டிலே குழந்தை பள்ளிக்கூடஞ் சென்றதும் மூதன் முதலிற் கற்றுக் கொள்வதென்ன? தன் தந்தை மூடன் என்பதேயாகும். தன் பாட்டன் பெரிய பைத்தியக்காரனென்றும், வேதசாஸ்திரங்கள் எல்லாம் வெறும் பொய்க்களஞ்சியங்களென்றும் அவன் கற்றுக் கொள்கிறான். அவனுக்குப் பதினறு வயதாகும் போது, உயிரற்று எலும்பற்ற, எதிர்மறைப் பிண்டமாக இருக்கிறான். எல்லாம் அவனுக்குக் கெடுதலாகவே காணப்படுகின்றன.

## திரு. இராஜாஜீ அவர்கள்

தமிழில் பேச்சுக் கெட்டுப்போ யிருப்பது மூன்றுவிதத்தில். ஒன்று, கொச்சைப்பதங்களுக்கு அளவுக்குமிஞ்சி இடங்கொடுத்து வருவது. இரண்டாவது ஆங்கிலமொழிகளைத் தயக்கமின்றி எல்லாக் காரியங்களுக்கும் எல்லாச் சமயங்களிலுங் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும்வழக்கம். மூன்ருவது, பேசும்பொழுது கையையும் தலையையும் ஆட்டி, பேச்சுக்குப்பதிலாக உடலை உபயோகித்துச் சம்பாஷணை நடத்தும் வழக்கம்.

இவைமூன்றும் பேச்சை அவலக்ஷணமாகச் செய்வதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனல் அது நம்முடைய இலக்கிய வளர்ச்சியைத் தடுத்து வரும் ரகசியத்தை அனைவரும் காணமாட்டார்கள். இரண்டாவதாகச் சொன்னகாரணம் மிகவும் முக்கியமான விஷயம். பலவேறு விஷயங்களை அறிந்தும் ஆராயாதும் வருந்தமிழர், தாங்கள் சாதாரணமாகப் பேசும்போது முழுதும் தமிழ் மொழிகளாகவேபேசினல் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும். விஷயங்களைப் பேசும்போது தமிழ்மொழி தெரியாத இடத்திலும், மறந்துபோன இடத்திலும், புதுத் துறைகளில் ஆராய்ச்சி செய்யும்போதும், வாதப் பிரதிவாதஞ் செய்யும்போதும், அறிவையும் நினைவையும் செலவழித்துத் தமிழ் மொழிகளைத்தேடி உபயோகிப்பதற்குப்பதில், எளிதில் கிடைக்கக் கூடிய ஆங்கிலமொழிகளை-அதாவது, பிறதேசத்தார் கஷ்டப்பட்டுத் தங்களுக்கென்று உண்டாக்கியிருக்கும் மொழிகளை, எவ்விதக் கூச்சமுமின்றி இடையிடையே கலந்து பேச்சைநடத்திவிட்டுத் தமிழுக்குச் சோறுபோடாமற் கொல்லுகிருேம். சோம்பேறிகளைப்பெற்ற தாயைப்போல் தமிழ் அவதிப் பட்டுவருகிறது. அன்னம்ஊட்டாத தேகம் எப்படி வளரும்? நுட்பமானபொருட்பேதங்களும் அவைகளுக்குத்தகுந்த மொழிகளும் நடையும் ஒருபாஷையில் எவ்வாறு தோன்றும்? தோன்றியவை எவ்வாறு உயிருடன் நிற்கும்? பொருளைப் புகுத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிப் பழகிவந்தாற்றானே பாஷை வளம்பெறும்? கிடைத்த புல்லையும் தவிட்டையும் ஆங்கிலமாட்டுக்கே போட்டுவந்தால் நம்முடைய பசுஎவ்வாறு பால் கொடுக்கும்? கொஞ்சம் தடைதோன்றிய இடங்களிலெல்லாம் ஆங்கிலத்தைப்போட்டு நிரவிப்பேச்சை ஓட்டிக்கொண்டு போனால், தமிழ் எங்ஙனம் வளரும்? அறிஞர்களெல்லாம் தமிழைக் கொல்லுவதற்காகச் சதியாலோசனை செய்தாற்கூட இதைவிடவேறு யுக்திகண்டுபிடிக்க முடியாது.

அன்பர்களே! இத்தனை பெரியோர்களும் எங்கள் உள்ளத்தை உருக்கித் தாய்மொழியின் தலைவாயிலில் நுழையுங் கட்டத்தில் நம்மை விட்டிருக்கிறார்கள். நம் நாடி நரம்புகள் துடிக்கின்றன. நம் பழைய பைந்தமிழ்ப் புலவர்களின் ஆணை நம் செவிகளிலே ஒலிக்கிறது. அவர்களின் சிந்தையில் தோன்றிய ஆயிரஎண்ணங்கள் நம்அரும்வாயிற் கதவைத் தட்டுகின்றன. நாம் நேசிக்குந் தாய்மொழி, நாம்தொண்டுசெய்ய ஆசைகொண்ட தாய்நாடு நம் உள்ளகத்தில் என்னவோ முணுமுணுக்கின்றது. உள்ளத்திலே வலிமையும், உடலிலே துடிப்பும், மனத்திலே - நோக்கிலே தெளிவுங் கொண்டவர்களாய்த் தாய்மொழிவாயிலில் நுழைவோம். அப்பொழுது சந்தேகங்கள் நம்மை நலியாவண்ணம், வேற்றுமைகள் நம் வலிமையை வேரறுக்காவண்ணம் நாம் நமது தாய்மொழி மனையில் தட்டின்றி உலாவுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இலட்சியத்தை, நமது குறியை, நமது உள்ளத்தின் உயர்ஆசையை நாம் அறிவுறுத்துவோம். ஆங்கிலம் வேணுமா வேண்டாமா என்றவாதம் இனித் தேவையில்லை. ஆனால் நாம், தாய்மொழி தலையெடுக்கச் செய்யவேண்டிய மார்க்கமெது? நாம் கைக்கொள்ளவேண்டிய முறைகள் யாவை? என்பதனை உலகஒளியின் ஊடே காண்போம்; கலப்போம். துன்பம் நிறைந்த இந்தக் கொடும்பாதையிற் பயன்கிடைக்குமா? கிடையாதா? என்றகவலைக்கு நம்அறிஞர்கள் முன்னே அழகாக எழுதிவிட்டார்கள். தாய்மொழியினாலேயே எப்பாடங்களையும் படிக்க - படிப்பிக்க ஆரம்ப பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம்வரையும் நடைபெறுவிட்டால், நாங்கள் நடைப்பிணங்களன்றோ? அறிவும் ஆண்மையும் அன்னையின் அன்பும் அற்ற மக்களாவோம். "ஆங்கிலமூலந்தான் சிந்திக்கவோ-சிந்தித்தவற்றை எழுதவோ முடியும்; தாய்மொழியில் முடியாது - துன்பமானது" என்றால், இந்த இலங்கை மக்களோடு மக்களாய் வாழும் உரிமைக்கோ-தகுதிக்கோ அருகதை அற்றவர்கள் என்பதே கருத்தாகும். உலகத்தை உய்விக்கும் சுமை வெள்ளையனை - வெள்ளைமொழியாம் ஆங்கிலத்தைச் சேர்ந்தது என்ற கருத்து, உளுத்து ஈடாடிய பழங் கருத்து. இக்கருத்தைச் சிறப்பாக ஆங்கில ஆசிரியர் என்பவர்கள் இன்னும் விடாது இறுகப் பிடித்திருப்பார்களானால் இவர்களை மிகப்பிற்போக்குவாதிகள் என்று நாம் அஞ்சாது அறைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்களே! தமிழ்நாட்டுக் காங்கிரஸ்தலைவர் திரு. காமராஸ்அவர்கள், சென்னைப் பிரதமமந்திரி யாயிருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள், ராஷ்டிரபதியாயிருந்த அபுகலாம் ஆசாத்அவர்கள், சீனாவின் தலைவர் சியாங்கோஷேக் அவர்கள் போன்ற இணையிலாத் தலைவர்கள் எந்தப்பல்கலைக் கழகத்தில் எந்தஆங்கிலப்பட்டம் பெற்றூர்கள். ஆங்கிலமே வரன்முறையாகத் தெரியாதவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவிக்கின்றேன். இவர்களின் ஆண்மையும் அறிவும் ஆக்கப்பாடும் ஆட்சிமுறையும் அகிலம்கண்டு ஆனந்தித்துள்ளது. ஜெர்மனி, யப்பான், ருசியா, சீனாபோன்ற நாடுகளில் போதனைக்கருவி ஆங்கிலமா? நோக்கும் ஆங்கிலமா? இல்லை! இல்லை!! ஆ! ருசியாவில் எத்தனைமொழிகள் சுயேச்சைபெற்று ஆக்கத்தில் அழகாகப் பாதுகாக்கப் படுகின்றன தெரியுமா?

ஜனநாயகத்தின் இலட்சியம்என்ன? யாருக்கும்விசேட உரிமையிருக்கக்கூடாது. எல்லோரையும் சமமான அரசியல்சமூகத் தகுதியுடையவர்களாகக்கருதி அரசாங்கம் நடத்தவேண்டும். (மக்கள் ஒருவர்போல் மற்றவரிருப்பதில்லை) ஆங்கிலக் கல்வியோ பொதுசனக்கல்வியை வேரோடுவெட்டியது. ஆங்கிலம் படித்தவர்கள் கர்வம் தலைக்கேறிப் பொதுமக்கள்மீது குற்றங்காட்டித் தாம் உயர்ந்த தேவர்களாக மாறிவிட்டார்கள். ஆங்கிலக்கல்வி, பொதுசனத்தை அறியாமையில்மூழ்குவித்து, பணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரருக்கும் அதிகாரபதவி வகிப்போருக்கும் கை கட்டி வாய்புதைத்து ஏவல்செய்வதுதான் என்று ஏற்படுகின்றதல்லவா? ஒரு முறை, தவருனது என்ருல் உடனே அதை மாற்றுதல் அறிஞர் கடன். தீய முறையிற் சிக்கிக்கொண்ட நல்லவர்களும் செயலற்று நிற்பதை யாம் காண்கின்ருேம். நம்மிடத்தில் நல்லெண்ணம் நிறைந்திருக்கலாம். ஆனல் நீரையும் நெருப்பையும் எவ்வளவு சமையல் செய்தாலும் சோறுங் கறியும் ஆகிவிடுமா? அதைப்போல் முதலாளித்துவமும் சாம்ராச்சியவாதமும் வளர்வதற்குக் கருவியாயிருக்கும் ஆங்கிலக்கல்வி நம்மைச் சீர்திருத்த முடியுமா? இதனலேயே மேற்கூறிய அறிஞர்கள் அழுத்தந் திருத்தமாக அடியோடு ஒழித்துவிடும்படி கூறியிருக்கிருர்கள். ஆங்கிலேயர் தம் நாட்டில் வழங்கும் கல்விமுறை வேறு, நம் நாட்டில் நாட்டிய கல்விமுறை வேறு என்பதனை ஒவ்வொரு கீழைத்தேசத்தவரும் நன்கு உணரவேண்டும். அதாவது செத்து விழுந்த நிலமானியவகுப்புக்கு முட்டுக் கொடுத்தது ஆங்கிலக் கல்வி; மிகப் பெரிய பணக்காரர்களைப் படைத்தது ஆங்கிலக் கல்வி; கழுத்தறுக்கும் போட்டியைக் காட்டியது ஆங்கிலக் கல்வி; கருணையற்ற சுரண்டலைச் சூழச்செய்தது ஆங்கிலக் கல்வி; முதலாளித்துவம் முற்றிய சாம்ராச்சிய வாதத்தை எழுப்பிக் காதல்கொள்ளச் செய்தது ஆங்கிலக் கல்வி; ஆங்கிலேயர் பொதுமக்களுடன் வைக்கும் தொடர்பை அறுக்கக் கருவியாகக் கொண்டது ஆங்கிலக் கல்வி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது உள்ளுணர்ச்சியையும் புறவுணர்ச்சியையும் கசக்கிப் பிழிந்தது ஆங்கிலக் கல்வியின் அடிப்படைக் கொள்கைகள். இன்று உலகம் ஓடும் ஓட்டத்திற்கு ஒக்க நாமும் ஓடவேண்டும். அப்படி ஓடத் தவறினல் நாம் அலக்கண் உறுவது நிச்சயம். பிரிட்டிஷார் நமக்குத் தந்த ஆங்கிலக் கல்வி, "நீ அடிமை; நீ தாழ்ந்தவன்" என்று குத்திக் காட்டுவதா யில்லையா? அரசியலில் ஒற்றுமை உணர்ச்சியும் தேசீய உணர்ச்சியும் தோன்றவேண்டுமாயின் கிழடுதட்டிய ஆங்கிலக் கல்வியை விட்டு இளமை எய்துவிப்பதற்குப் புதிய கல்விமுறை தேவை.

கல்வி ஆங்கிலமல்ல. முக்திக்கு வழிகாட்டுவதுதான் கல்வி. ஆ! அந்தோ! இருள் சூழ்ந்த பாலைவனத்தில் பலவந்தமாகக் கொண்டுபோகப் பட்டோம். பலாத்காரத்தில் இன்று உலகம் சலித்துக்கொண்டே யிருக்கிறது. இனி முடியாது. மறுங்கள்; சத்தியம் செய்யுங்கள்; பேச்சிலும் சரி, எழுத்திலும் சரி, தமிழை ஏற்றுக்கொள்ள—தாய்மொழியைத் தலையில் சூட உறுதிகொள்ளுங்கள். உங்கள் உள்ளக் கருத்துக்களை—உணர்ச்சிகளை அப்படியே தெரிவிக்க முடிவுசெய்யுங்கள். எதிர்காலத்தை நோக்குங்கள்! பிற நாடுகளைப் பாருங்கள்! அவைகளின் முன்னேற்ற ஏணி எவற்றின் அடிப்படையில் நின்றது என்று ஆராயுங்கள்! உங்கள் பிள்ளைகளின்மேல் இரக்கங் காட்டுங்கள்! அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளைப் பலத்தையும் உடற்பலத்தையும் வீணாக்காதீர்கள்! சுயசிந்தனையைச் சிதற அடிக்காதீர்கள்!

தமிழர்களே! அறியாமையும் ஆசையும் மலிந்த காலத்திலே நாம் வாழ்கிறோம். நம்மை ஆள்வோரும் மனிதவிவகாரங்களை நிர்வகிப்போரும் இக் காலத்தின் உண்மையான விளைவேயாவார்கள். ஆசிய நாடுகள் முன்னேறிக்கொண் டிருக்கிறது. பழமையும் பதங்கெட்டு மறைந்தோடுகிறது. மற்றவர்களின் விளையாட்டுக் குதவும் கருவிகளாகவும், சம்பவங்களையுஞ் செய்திகளையும் சும்மா பார்த்துக் கொண் டிருப்பவர்களாகவும் இதுவரை இருந்து வாழ்ந்திருக்கின்றோம். நாமே நமது செயல்களைச் செய்து முடிக்கும் சந்தர்ப்பம் இப்பொழுதுதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே இனி நம் விருப்பப்படி வரலாற்றை வரைவோம்; உருவாக்குவோம். இதுவரை பிறர் நமக்கு எனக் கூறித் தம் நலனுக்காக்கிய சரித்திரங்களைச் சரித்து வீழ்த்துவோம். தேசீயக் கொள்கை போய்ச் சர்வதேசியக் கொள்கை வலுப்பெற்றுக்கொண்டிருக்கும் இக்காலத்தில், தேசீயக்கொள்கைகளில் ஒன்றாயும், உயிர்நாடியாயும் உள்ள தாய்மொழிமூலம் அனைத்தையுங் கற்கும் அழகுநிலையை இன்னும் ஆழ்ந்து ஆலோசிப்பதும் — வாதஞ்செய்வதும் — கால எல்லை கணிப்பதும் எவ்வளவு பிற்போக்கு என்பதை எழுதவேண்டுமோ? உலகமே இருள் வழியை விட்டு விலக முயலுங் காலத்தில், நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இருளுக்குள் இருப்போம் என்ருல் உலகமே எம்மைப் பார்த்து நகைக்கும்.

எதிர்காலத் தமிழ் உலகே! உன்னைக் காண்பவர் உண்மைத் தமிழர்களாயிருக்கவேண்டும். உனது விதியை நீயே ஆக்கிக்கொள். தமிழ் நூல்களைப் பற்றியும் தமிழ்ப் பண்பாடு—மரபு இவைகளைப்பற்றியும் அறியாதார் உன்னைக் காணவோ—விதி செய்யவோ இடங்கொடாதே. எத்துணை அரிய பெரிய அறிவு (மேல்நாட்டறிவு) உள்ளவர்களாயிருந்தாலும் உன் பண்பாட்டிற் பற்றில்லாதவர்கள்—தோயாதவர்கள்—உணர்ச்சி யிம்மியு மில்லாதவர்கள் எவராயினும் ஏற்றுக்கொள்ளாதே. இவர்கள் உரிமையென்ரு லென்ன? கடமையென்ரு லென்ன? என்பதிற் கருத்திலே தெளிவற்றவர்கள். தமிழ்மரபு தெரியாதார் தமிழ்ப் பகுதிகளில் இன்று இருந்து தமிழ்மரபு வாழ்த் திட்டமிடுதல் வெட்கத்திற்குரிய செய்தியாகும். இஃது ஒரு குரோட்டன் செடியைச் சாடியில் வைத்து அதைக் கீழும் வேர்க்கொள்ளாது மேலும் பரந்துவளராது நன்ருகக் கத்தரித்து அலங்கரித்து வளர்ப்பதுபோல இருக்கின்றது. அகத்தில் அரும்பி அலர்ந்த காதல், புறத்திற் புகுந்து பலதிறப்பட்ட போராட்டங்களையும் ஊடுருவிக் கடந்து, மாசற்ற அருளாகி ஒன்ருகக் காணும் ஒருமைக் காட்சி, இன்று அதிகாரத்தில் என்னருமைத் தாய்மொழியின் பெயரால் இருப்பவரிடைக் காண்கிலோம். இதுவுறுதி. இதுகாறும் அடிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிற் கிடந்தவர்கள் இவ்விதமான ஒரு புனித காரியத்தைச் செய்யத் தயங்குகிறார்கள். ஆங்கிலமில்லையேல் மூச்சுவிட முடியவில்லையெனத் திணறுகிறார்கள்.

இளந்தமிழா! உன் நாட்டை நேசி. உன் மொழியைப் பேசு; எழுது. பிச்சையெடுத்தாலும் ஆங்கிலத்தின் மூலம் வரும் ஒவ்வாத உணவை ஏற்காதே; உனது நாடு கடவுள் உனக்கிட்ட வீடு. உனது பெயர் உனது புகழ் நீ யார் என்பதெல்லாம் உன் நாட்டிலேயே - அந் நாட்டின் மொழியிலேயே அடங்கி யிருக்கின்றன. தமிழா! தமிழ்க் கலையால் உலகைக் கூப்பிடு. அப்பொழுதுதான் உலகம் உன்னை உற்றுப் பார்க்கும். அப்பொழுது தான் நீ தமிழனாக முடியும். என்ன நேரிட்டாலும் என்னுயிர் என் மொழி என உறுதிகொள். "தமிழ்யுகம் வேண்டும்; ஆங்கிலயுகம் அகலவேண்டும்" என்று தாரையூது. நம் முன்னோர்கள் மீண்டும் பிறக்க வேண்டும். கொழும்பிலுள்ள அதிகார வர்க்கம் கேட்டாலும் சரி கேட்காவிட்டாலும் சரி உள்ளுணர்ச்சி கொண்டு செயலில் நில். வெற்றியின் தத்துவம் உழைப்பே. உழைப்பை உயிர் நாடியாகக் கொள். வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!! வாழ்க இவ்வுலகு!!!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org